மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

புதிய பாடப் பிரிவுகள்

***13214—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், அம்மாபேட்டையில் உள்ள நாச்சியப்பா கூட்டுறவு பயிற்சி மையத்தில் நெசவுத் தொழில்நுட்பம் சார்ந்த புதிய பாடப் பிரிவுகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நலம் பெற்று வந்து, இந்த அவையில் அமர்ந்து, இந்த சட்டப் பேரவையை நடத்துவது எங்களுக்கு மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது. உண்மையிலேயே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் இந்தப் பேரவைக்கு என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழனுடைய பண்பும், தமிழனுடைய கலாச்சாரமும் என்றும் மாறவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுதான் தாங்கள் உடல் நலம் குன்றியிருந்த நேரத்தில் இங்கிருக்கிற அனைத்து உறுப்பினர்களும் கட்சி சார்பற்ற முறையில் தங்களுடைய நலத்தை விரும்பி இங்கே கேட்டது. அவர்கள் பேசிய பிறகுதான் எங்களுக்கே தெரிகின்ற சூழ்நிலைகூட இருந்தது என்ற நிலையைப் பார்க்கின்றபொழுது, உண்மையிலேயே இந்த அற்புதமான கலாச்சாரம் மிகப் பாராட்டத்தக்கதாகவும், போற்றத்தக்கதாகவும் இருக்கிறது. நம்முடைய தமிழனுடைய தனித்தன்மை உண்மையிலேயே வரவேற்கக்கூடியது என்று தெரிவித்து, இந்த நேரத்திலே இங்கே இருக்கிற அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். தாங்கள் மீண்டும் நலம் பெற்று, அம்மா அவர்களுடைய அரசை வழிநடத்துகிற, இந்த

2017 ஜூலை 6]

அவையை வழிநடத்துகிற நல்ல பாக்கியத்தைப் பெறுகிறவகையில், ஆண்டவனின் நல்லாசியும், அம்மா அவர்களுடைய நல்லாசியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாசியும் தங்களுக்கு உரித்தாகட்டும் என்று தெரிவித்து, இந்த நேரத்திலே என்னுடைய பதிலைத் தொடங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், அம்மாபேட்டையிலுள்ள நாச்சியப்பா கூட்டுறவு பயிற்சி மையத்தில் நெசவுத் தொழில்நுட்பம் சார்ந்த புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்துபேசி, அவர்களுடைய அனுமதியோடு, நிச்சயமாக எதிர்காலத்திலே புதிய தொழில்நுட்பம் சார்ந்த பாடப் பிரிவு உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *'இருந்தாலும், மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்; இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்' என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு வடிவம் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இறந்தும் இறவாப் புகழ் பெற்ற இதய தெய்வம் எங்கள் அன்னை புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளாசியுடன், அம்மா அவர்களின் நல்லரசை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, புதிய பொலிவுடனும், வலிவுடனும் இன்றைய தினம் சட்டப்பேரவைக்கு வருகை தந்து, தலைமையேற்றுக் கொண்டிருக்கின்ற நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தெற்கு தொகுதி, ஜவுளி மற்றும் நெசவுத் தொழில் சார்ந்த உப தொழில்கள் செய்கின்றவர்கள் நிறைந்திருக்கின்ற பகுதி. இந்தப் பகுதியிலே இருக்கின்ற நாச்சியப்பா கூட்டுறவு பயிற்சி மையம் 1959 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 3.83 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி மையத்தில் Computer technology, Jewel Appraiser *எனப்படும் நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, கணினிப் பொறி*

பயிற்சி, அரசுப் பணியாளர்களுக்குண்டான Group II, Group IV தேர்வுகளுக்கான குறுகிய காலப் பயிற்சி, நேர்முகத் தேர்விற்கான பயிற்சி வகுப்புகளும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து B.Com., M.Com., M.C.A., ஆகிய படிப்புகளுக்கான பகுதிநேர பாடப் பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இம்மையத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பட்டு நூல் மற்றும் ஜரிகை தரத்தினை ஆய்வு செய்தல், நெசவுப் பயிற்சி, சாயப் பயிற்சி, புதிய வடிவமைப்புப் பயிற்சி, embroidery பயிற்சி, கணினி designing மற்றும் drawing பயிற்சி, புடவைகளுக்கு கல் ஒட்டுதல் பயிற்சி ஆகிய பயிற்சிகளுக்கான புதிய பாடப் பிரிவுகளைத் துவக்கி, பயிற்றுவித்தால், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அரசு மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறுவதோடு, சுயதொழில் தொடங்கவும் வாய்ப்பு ஏற்படும். நெசவு சார்ந்த ஜவுளித் தொழிலும் ஏற்றம் பெறும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, இந்தப் பயிற்சி மையத்திலே நெசவுத் தொழில்நுட்பம் சார்ந்த புதிய பாடப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னதற்காக எனது தொகுதி சார்ந்த நெசவாளர் பெருமக்கள், வாக்காளப் பெருமக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

143—

மின் உற்பத்தி நிலையம்

***8767—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாநகராட்சியில் குப்பையிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?